# 20

### சபை:

# இதன் ஒழுங்குமுறை

## தொடக்க ஏற்பாடு

1. ***ஒருங்கமைக்கப்படாத சபையொன்று ஒழுக்கமுறைமையை வெற்றிகரமாய் அமல்படுத்த முடியுமா? ஏன் முடியாது?***
2. ***நன்கு - ஒருங்கமைக்கப்பட்ட சபையை அமைக்கத் தேவைப்படுவது என்ன?***
3. ***கர்த்தர் சபைக்காக மரித்தது ஏன் (எபே. 5:25-27)?***
4. ***சபையானது கிறிஸ்துவுடன் எவ்வாறு உறவுபடுத்தப்படுகின்றது (ரோமர் 7:4; 2 கொரி. 11:2)?***
   *அ. மணவாட்டி பரிசுத்தமற்றும் உண்மையற்றும் போனால் என்னவாகும்?*
   *ஆ. சபையானது உலகத்துடன் வேசித்தனம் செய்தால் என்னவாகும்?*
5. ***ஒழுங்குமுறை புறக்கணிக்கப்பட்டால் கர்த்தர் என்ன செய்வார் (வெளி. 2:5; 3:16)?***
6. ***தேவபக்தியற்ற உறுப்பினர்கள் சபை முழுவதையும் எவ்வாறு பாதிக்கின்றனர் (1 கொரி. 5:6)?***

## சபையைத் தூய்மையாகக் காத்துக் கொள்வது எவ்வாறு?

1. ***எல்லாக் கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவை எவ்விதமாக - என்னவாகக் கருத வேண்டும் (எபி. 2:17, 18)?***
2. ***பலவீனர்களின் பிறழ்வுகளினால் கிறிஸ்து எவ்வாறு தொடப்பட்டார்? எல்லாரும் அவரிடத்தில் எவ்வாறு அணுக வேண்டும் (எபி. 4:15, 16)?***
3. ***கிறிஸ்தவர்கள் பாவம் செய்தால் என்னவாகும்? அதற்கு நிவாரணம் என்ன (1 யோவா. 2:1, 2)?***
4. ***எல்லாரும் தொடர்ந்து செய்யும்படி போதிக்க வேண்டியது என்ன? ஏன் (1 யோவா. 1:9)?***
5. ***சபையானது எதைக் குறித்துத் தொடர்ந்து எச்சரிக்கப்பட வேண்டும் (எபி. 3:12, 13)?***
6. ***பவுலின் முப்பரிமாணப் புத்திகூறுதலைத் தருக (எபி. 10:24, 25).***
7. ***எல்லாருடைய வாழ்க்கையையும் பண்புபடுத்த வேண்டிய இரு***

***விஷயங்களைக் குறிப்பிடுக (யாக். 5:16).***

8. ***முதல் சபை என்ன செய்தது (அப். 2:42)?***
9. ***சபையை பரிசுத்தமான நிலையில் வைத்துக் கொள்ள, மூப்பர்கள் என்ன செய்ய வேண்டும் (1 தெச. 5:14, 15)?***

## *ஒழுங்கின்மையை ஏற்படுத்துவது எது?*

1. ***பாவத்தின் மூன்று விளக்கங்களைத் தருக (யாக். 4:17; 1 யோவா. 3:4; 5:17).***
2. ***ஒழுங்கற்ற தன்மையை எது தடை செய்யும் (1 யோவா. 1:9)?***
3. ***ஒழுங்கற்ற பண்பைப் பற்றி விவரிக்கவும் (நீதி. 29:1). ஒழுங்கற்ற தன்மைக்கு கர்த்தருடைய உதாரணத்தைத் தருக (லூக். 12:45, 46).***

## *ஒழுங்கற்றவர்கள் ஒழுங்கு படுத்தப்பட வேண்டியது எப்பொழுது?*

1. ***முதலாவது செய்யப்பட வேண்டிய செயல்படிகளில் ஒன்றைக் குறிப்பிடவும் (1 யோவா. 5:16)?***
2. ***விசுவாசிப்பவர்கள் என்ன செய்யும்படி இயேசு புத்தி கூறினார் (யாக். 5:19, 20)?***
3. ***பாவத்தினால் மேற்கொள்ளப்பட்டவர்களுக்கு பலமுள்ளவர்கள் எவ்வாறு உதவ வேண்டும் (கலா. 6:1)?***
4. ***அப்படிப்பட்டவர்களை மீட்க, மூப்பர்கள் என்ன செய்ய வேண்டும் (1 தெச. 5:14)?***
5. ***கலகக்காரர்களை இரட்சிப்பதற்கு எல்லாரும் எந்த அளவுக்குச் செல்ல வேண்டும் (மத். 18:15-19)?***
   *அ. இது தனிப்பட்ட முறையீடுகளுக்கு மட்டுமான செயல் முறையாக உள்ளதா?*
   *ஆ. ஒழுங்கு படுத்துதலின் எல்லா விஷயங்களிலும் இது பயன் படுத்தப்படக் கூடாதா?*
6. ***இந்த முயற்சிகள் யாவும் தோல்வியுற்றால் என்ன செய்ய வேண்டும் (2 தெச. 3:6)?***
7. ***ஒழுக்கமற்ற மனிதரை எவ்வாறு கையாள வேண்டும் (1 கொரி. 5:3-5, 13)?***
   *ஒழுங்கு படுத்துதலில் சபையார் யாவரும் பங்கேற்க வேண்டுமா?*

## *ஒழுங்கு படுத்துதலைச் செயல்படுத்த வேண்டியது ஏன்?*

1. ***பாவம் நிறைந்த ஒரு மனிதர் சபை முழுவதையும் எவ்வாறு பாதிப்பார் (1 கொரி. 5:6)?***
2. ***ஆகானுடைய பாவமானது இஸ்ரவேலரின் படை முழுவதையும் எவ்வாறு பாதித்தது (யோசு. 7:1, 5, 8)?***

*தேவன் எப்பொழுது இஸ்ரவேலருடன் இருப்பதாக வாக்குத்தத்தம் செய்தார் (யோசு. 7:13)?*

3. ***பல சபைகள் தங்களின் நற்தன்மைக்கான செல்வாக்கை இழந்து போயுள்ளது ஏன்?***
4. ***ஒழுங்கு படுத்துதல் செயல்படுத்தப்படாதிருந்தால், மூப்பர்கள் தேவனுக்குப் பற்றுறுதியுடன் இருக்க முடியுமா (2 தெச. 3:6)?***
   - *அ. ஒழுங்கு படுத்துதல் செயல்படுத்தப்படக் கூடாது என்று வாதம் செய்யும் மனிதரைப் பற்றிய விஷயம் என்ன?*
   - *ஆ. மத். 13:27-30, 37ல் இருந்து அவர் தரும் நிரூபணமானது அவரை நிலைநிறுத்துகின்றதா (2 தெச. 3:6, 14)?*
5. ***எருசலேம் சபையில் ஒழுங்கு படுத்துதலைத் தொடர்ந்து நடைபெற்றது என்ன (அப். 5:11, 14)?***
6. ***ஐக்கியத்தை விலக்கிக் கொள்ளுவதின் இறுதியான நோக்கம் என்ன (1 கொரி. 5:4, 5)?***

## *ஒழுங்கு படுத்தப்பட்டவர்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும்?*

1. ***அப்படிப்பட்டவர்களுடனான சமூகத் தொடர்புகளைப் பற்றிய விஷயம் என்ன (1 கொரி. 5:11; 2 தெச. 3:14)?***
2. ***அப்படிப்பட்ட ஒருவர் எவ்விதமாய்ப் புத்தி கூறப்பட வேண்டும் (2 தெச. 3:15)?***
3. ***யோவான் புத்தி கூறியது என்ன (1 யோவா. 5:16)?***